**செய்தி வெளியீடு எண்.17/2017 நாள் 10.03.2017**

**சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு – கட்டுமானப் பணிக்கு குடிநீரை வினியோகம் செய்த வாரிய ஒப்பந்த லாரி மீது நடவடிக்கை**

**––––**

சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாநகர பகுதிகளில் குடிநீர் வினியோகம், கழிவுநீரகற்றும் பணிகள் மற்றும் கோடைக் கால குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டி எடுக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றார். அதன் அடிப்படையில், கடந்த 07.03.2017 அன்று வளசரவாக்கம் பகுதியில் ஆய்வு மேற்கொண்டபோது TN 12 B 8022 என்ற பதிவு எண் கொண்ட சென்னைக் குடிநீர் வாரிய ஒப்பந்த ஊர்தியானது குடிநீரை, முறைகேடாக மவுண்ட் பூந்தமல்லி பிரதான சாலையில் உள்ள ஒரு தனியார் கட்டுமான பணிக்கு வழங்குவது கண்டறியப்பட்டு உடனடியாக அந்த ஒப்பந்த ஊர்தியை சென்னைக் குடிநீர் வாரிய குடிநீர் வினியோக பணியிலிருந்து விடுவித்திட ஆணை பிறப்பித்தார்.

மேலும் இதுபோல மக்களுக்கு வழங்க வேண்டிய குடிநீரை முறைகேடாக வேறு பணிகளுக்கு பயன்படுத்தினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்


TRANSPORT
ASHOK LEYLAND
TN 12
B 8022


NIIT